... U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41

திருச்சிற்றம்பலம்.

திருவான்மியூர்ப்புராணம்.

இஃது

தசாவதானம்

பேறை - ஜெகநாதப்பிள்ளையவர்கள் மாணாக்கர்

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரால்

இயற்றப்பட்டு,

மெ - அ - ரு - அ - ரு.

இராமநாதஞ்செட்டியாரவர்கள்

பொருளுதவியால்,

ஷை முதலியாரவர்களின் மார்க்கநண்பராகிய

பிருங்கி-இராமசாமிமுதலியாரவர்களது

சென்னை

இந்து யூனியன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

மன்மத வருஷம் - வைகாசி மீ

1895.

சிவமயம

சூசீபத்திரம்.

எண்.	படலம்.		பக்கம
க	கடவுள்வாழ்த்து	...	க
உ	திருநாட்டுப்படலம	...	சு
ந	திருநகரப்படலம	...	உக
ச	நைமிசாரணியப்படலம	...	நந
ரு	புராணவரலாற்றுப்படலம	...	நஎ
சு	வான்மீகாபூசித்தபடலம	...	ச0
எ	இரட்சசுசென்மநாசப்படலம	...	ருகூ
அ	பார்த்தசாரதிபாபநாசப்படலம	...	சு0
கூ	சந்திரன்காமநாசப்படலம	...	எரு
க0	சூரியன்பூசைபுரிந்தபடலம	...	கூஉ
கக	இந்திரனசாபந்தீர்ந்தபடலம	...	கூசு
கஉ	பிரமன்றிருவிழாச்செய்படலம்	...	க0உ
கந	வேதம்பூசைபுரிபடலம	...	ககக
கச	காமதேனுவருள்பெறுபடலம	...	கககு
கரு	இயமன்பழிதீர்படலம	...	கஉக
கசு	இராமன்வரம்பெறுபடலம்	...	கஉஅ
கஎ	மருந்தீசப்படலம்	...	கநந
கஅ	திருமணக்கோலங்காட்டியபடலம்	...	கநகூ
ககூ	பிருங்கிதரிசனஞ்செய்படலம்	...	கசரு

சிவமயம்.

திருவான்மியூர்ப்புராண வசனசுருக்கம்.

வான்மீகர்பூசித்தபடலம்.

தாமரைமலரி லெழுந்தருளியிருக்கு நான்முகக்கடவுளின் புத்திரருட் சிறந்த தவத்தினை வாய்ந்த வியாகிருதி யென்பவர் பெற்றெடுத்த பிரசேதசு என்னு முனிவரனானவர் வானப்பிரஸ்தரூப வாழ்ந்து வருகையில் இவருக் கொரு புத்திரன் பிறந்தனன். இவன் சிறுவயது முதல் பிதாசொல்லைக்கே ளாதவனாகிக் கல்வி முதலியன பயிலாது காட்டிலுள்ள மறவர்களுடனே கூடிக் கொண்டு அவர்கள்செய்யுந் தீமைகளினன்குபழகிப் புண்ணியத்தினைச் சிறிது நினையாது தனது குலத்தொழிலை முற்று மறந்து, இரவும் பகலுங்கொலை புரிதலையே விரதமாகக்கொண்டு உலகாயதனுபச சஞ்சரித்துவருவன். வேடுவர் கூட்டத்திலே கூடிக்கொண்டு காட்டிலே சென்று வேட்டையாடுவன், பெரிய விருட்சங்களிலேறி மிருகங்களிருக்குமிடமறிந்து அவை வரும் வழியில் வலைகளை கட்டி அவற்றுளகப்படு மவைகளைக்கொண்டு செல்வன், காட்டின்வழியே போகிறவர்கள்மேல் புலிப்போல பாய்ந்து கொல்லுவன். இவ்வாறு வாழுகையில் ஒருநாள் ஒரு பெரிய கானத்தினுணுழைந்து ஒரு சிங்கத் தினைக் கொன்று திரும்புகையில் வழியிலொரு மரத்தில் ஒரு பெரியவர் காலமேலாகவும் தலைகீழாகவுந் தொங்கக்கண்டு ஆச்சரியமுற்று "இவனிவ் வண்ண மிருப்பானேன் ஏதோ சாதனம்பண்ணுகிறான்போலு மிவனையிக்கண மே மாய்ப்பேன்" என்று ஒருபாணத்தை யவர்மீது விட்டனன். அது இரண்டு துண்டாயப் போயிற்று, மறுபடியுஞ் சிலவம்புகளைப் பிரயோகித்தனன். அவைகளுந் தூளாயின. வேடன் நோக்கிப்பயந்து "ஓ! ஓ! இவன் தேவனோ அல்லது முனிவனோ! என்று அத்திரங்கள் சிறிதேனுந் தீமைசெய்யவில்லை யே, அந்தோ! இம்மகானை நான் கொல்லத்துணிந்து மிகப்பாவியானேன், தவத்தினைக்கெடுப்பு முலகில் பெரியகாரியமொன்றுமில்லை, என் காலமுழு வதினையும் வீணாய்க்கழித்தேன், இனியுண்மைப்பொருளையறிவது எங்ங

ணம், பிராமண குலத்திற் பிறந்தும் வேடுவனாய்த் திரிந்து கெட்டேன், இவரைத் தரிசித்தமாத்திரத்தி லெனக்குச் சிறிது நல்லறிவு விளங்குகிறது, இவர் தமது கண்களைத் திறந்து என்னைப் பார்ப்பாரேல் நான் புனிதனாய் விடுவேன்" என்று தன்னுள் நினைந்து தன் கரத்திருந்த வம்புகளைத் தூரத்தே யெறிந்துவிட்டு அவர் சமீபத்தில் சிலகாலங் காத்துக்கொண்டிருந்தனன்.

மரத்தினை யாதாரமாகக்கொண்டு தொங்கு முனிவர் ஒருநாள் கண்விழித்துத் தனது சமீபத்துள்ள வேடுவனைப் பார்த்து, "அட துஷ்ட! பிராமண குலத்திற் பிறந்து தந்தையின் வழியே காலத்தைக் கழியாது உலகத்திற் கோரணியனாக வாழ்ந்து நல்லவர் நடுங்கப் புல்லர்களுடனே கூடிக்கொண்டு புலாலினையேயுண்டு கெட்டாய் நீ யெவ்விதம் முயல்வாய் மாமிசப் பருவம்போலவுள்ள நீ யெப்போது சாவாய் பாவி" யென்றனர். உடனே வேடன் பயந்து நடுங்கிச் சமீபத்திலோடித் திருவடியில் வீழ்ந்து "சுவாமி! ஏழையேன் செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்து நானினியுய்யவேண்டிய வழியை யருளவேண்டு" மென்றனன். முனிவர் கேட்டுக் கூறுவாராயினர்.

"வேட! நின் பூர்வ ஜென்மத்து நல்லூழின் வழியால் நினக்குச் சிறிது அறிவு இப்போது விளங்கியது, நீ புன்மை நீந்து உய்வதற்கு ஆதாரமாக விருப்பது யோகமேயாம், அவ்வியோகங் கூடுதற்கு முந்திப் பஞ்சேந்திரியங்களின் வழியாகச் செல்லுகின்ற புத்தியை யொருவழிப்படுத்தி நாளடைவில் உலகத்தை மறக்கும்படிப் பயின்று நின்று தத்துவங்களை நன்குசோதித்து இவைகட்குச் செயல்கள் நீங்கிடையாதென்றும், இவைகளைச் சேட்டிப்பிக்க விவற்றின் வேறேயொன்றுள தென்றும், அதுவே யான்மாவென்றும், இவ்வான்மாவும் பளிங்குபோன்று சார்போதனாய் விளங்குவதால் இதனை நிமலத்தைப் போக்கி தன்னின் வேறாயிருப்பதொன்றுண்டு அதுவே பரமான்மாவென்றுந் தேர்ந்து, இப்பரமான்ம தரிசனம் இருபுருவத்தின் மத்தியிற் காணும் பொருட்டு மூலாதாரத்துள்ளதாகும் மூர்ப்பாம்பைச் சட்டாக்கினியான மெல்லென வெழுப்பிச் சந்திரமண்டலத்துட்டாக்கச்செய்து அவணின்று மொழுகும் அமுதத்தைப் புசித்து கோடியுகங்களை நொடிநேரமாகக் கழித்து அட்டமாசித்திகளுங் கைவரப்பெற்று யோகத்து வீற்றிருப்பாய் பெரியவ" னென்றார்.

வேடுவன் கேட்டவுடன் சந்தோஷித்து விடைபெற்றுத் திரும்பிக் கங்காதீரத்தின் சமீபத்து ஒரு ஆசிரமம் வகுத்துக் கிழக்குமுகமாவிருந்து யோகத்திற்கு ஆரம்பித்தனன் தனது குருசொன்ன நிலையினிலிருந்து, ஆயிரம் வருடம் யோகங்கூடினன் இவ்வேடுவன்மீது புற்று வளர்ந்து விட்டு [illegible]

த்தில் அனேக வாலவிருட்சங்கள் முளைத்தன. அம்மரங்களின் கீழுமே லும் அனேகமான மிருகங்களும் பட்சிகளும் வாசமாயின.

இவனிவ்வாறிருக்கையில் நாரதமுனிவரொருநாள் சத்தியலோகஞ் சென்று பிரமன் சந்நிதானத்தில் வந்து யாழ்வாசித்து நின்றனா. வேதன் கேட்டுச்சந்தோஷித்து, முனிவ! உலகத்திலேதாகிலும் அதிசயமுளதோவென்றனா, நாரதா பணிந்து ஐய! நானொன்றுங் கண்டேனில்லை, இனியே தாகிலு நடக்கவேண்டிய வதிசயங்களுளவேல் தேவரீர் தயைசெய்கவென்றனன். திசைமுகன் முனியை நோக்கி யாழ்வல்லோய்! கேட்டிடுதி, சில தினங்கட்கு முந்திக் கோதாவரித்தீரத்தில் கௌதமனிருந்தனா, அங்குநாரதனாவந்து அவனைப்பார்த்து முனிவ! நீமிகவிளைத்தனை எங்கெங்கே க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு எந்தெந்த தீர்த்தங்களிலாடிவந்தனை அவ்வவ்விடங்களிலேதாகிலும் விசேஷங்களுளவோ கூறுதியென்றனன். மே சவ! நான் வருமவழியிலொருகுன்றில் நான்கு குரங்குகள் விபூதிபூசிக்கொண்டு வில்வவிதழ்களைக்கொண்டு சிவபூசைசெய்துகொண்டிருந்தன அச்சமயத்தில் ஒரு வேட னவ்வழியேவந்து அவைகளைப்பிடித்துக்கயிற்றாற்கட்டிக் கொண்டேகினன் அவற்றுளொரு குரங்கு அவ்வேடனை நோக்கி எங்களினாலுனக்கு யாதொரு பிரயோசனமுமில்லை, நாங்கள் எங்கள் சிவபூசை முடித்துச் சுவாமியின் நிர்மாலியங் கொண்டுபோய்க் கொடுத்த பின்னரே எம்மனைவியா புசிப்புண்பர், குட்டிகளும் பால் குடிக்கும், இலையேல் வழிபார்த்துப் பார்த்து இறந்துவிடுமென்றது உடனே வேடுவன் மனதிரங்கிக் கட்டவிழ்த்துவிடுத்த தன்வீடேகினன் அந்நான்கு குரங்குகளும் பின்னா ஒரு மரத்திலிருந்துகொண்டு பேசவாரம்பித்தன நாம் என்ன செய்வது இந்த மாசிமாதம் சோமவாரம் சிவராத்திரி வரப்போகிறதாம் அன்று இரவில் நான்கு சாமமுஞ் சிவபூசை செய்தல் மிகபுண்ணியமென்று சில முனிவர் பேசிக்கொண்டார்கள். நாமெப்படிச்செய்வது வேடுவனுடைய கயிற்றின் கட்டினால் நாமிக மெலிகின்றோமே என்றன வென்றார் கௌதமர் வார்த்தையைக் கேட்டவுடன் நாரதனன், வாரும் நாம் போய் அவற்றைப் பார்ப்போமென்று முனிவருடன் அவ்விடம் போய் மரங்களின்மீது இருக்குங் குரங்குகளைத் தன் கண்களாற் கடாட்சித்து அவற்றின் துன்பத்தைப் போக்கினன். அவைகள் வலிவுற்றுச் சுகமாய் வாழ்ந்தன.

இரண்டொரு நாளாயினவும் சிவராத்திரி தினம்வர அக்குரங்குகள் நான்கும் ஸ்நானஞ்செய்து விபூதிதரித்து வில்வ விதழ்களைப் பறித்துக்கொண்டு சமீபத்துற்ற சிவாலயத்திற்குச்சென்று அச்சிவாலயத்துள் முன்னமே புலத்திய முனிவர் கதவை மூடிக்கொண்டு சிவபூசை செய்து கொண்டிருந்தனர். குரங்குகள் மூன்று சாமத்திருந்துங் கதவு திறவாமையால் கோபங்கொண்டு கதவைப் பெயர்த்தெறிந்து உள்ளே பிரவேசித்தன. புலத்தியா

கண்டு கோபித்து நீங்கள் என் சிவபூசைக்கு இடையூறு செய்தமையால் உட னே அழிந்துபோகக் கடவீரென்று சபித்தனர். குரங்குகள் புலத்தியனர் நோக்கி முனிவ! அடுத்த சன்மத்தில் நின்குலத்துடனே எங்களால் மாயக் கடவையென்று சபித்து விட்டிறந்தன. நாரதமுனிவே! சிவபூசையின் மத்தியில் கோபித்துக் கொண்டமையால் புலத்திய முனிவன் அசுரனாகிய இராவணனாகப் பிறப்பன். குரங்குகளுங் கூட சிலகாலம் என்னுலகில் வாழ்ந்த பின்னர் உலகில் வாலி, சுக்கிரீவன், அனுமான், அங்கதனாகப் பிறந்து இராவணனுக்குப் பகையாவர். நந்தியெம்பெருமான் சாபத்தால் விஷ்ணு வானவர் இராமனாகப் பிறந்து அவ்விராவணனைக் கொல்லுவர் என்றனர். இங்ஙனம் கூறிய பிரமனை நாரதன் வணங்கி, பங்கயனே! விஷ்ணுவிற்கு நந்தியெம்பெருமான் சாபமேன் வந்தது திருவாய்மலர்ந்தருளவேண்டுமெ னக் கூறவர் ஒருகாலத்துப் பிருகுமுனிவரானவர் மூன்று லோகங்களை யுஞ் சஞ்சரித்து வருகையில் ஒருநாள் வைகுண்டத்திற்குச் சென்று நாராய ணனை எழுந்தருளியிருக்கும் இடத்திற்குச் சமீபிக்க வாயலிலிருந்த கருடன் தடுத்து முனிவரே யுள்ளேபோகற்க, எனது தலைவன் தன் நாயகியோடு சரசலீலை செய்கின்றனன் என்றது. முனிவன் கேட்டு சிவ! சிவ! இதென்ன கொடுமை இப்பொழுது பிரதோஷ சமயமாயிற்று இவ்வமயம் எத்தகையோருஞ் சிவதரிசனார்த்தமாகவும் சிவபூசையாற்றவும் இருக்கின்ற னரோ, இவ்விஷ்ணுமாத்திரம் காமார்த்தராயிருப்பது என்னே! என்று கோபித்து உடனே யவ்விடம் விட்டுப் பெயர்ந்து கைலாயத்தை யடைந்து நந்தியெம்பெருமான் திருவடியில் வீழ்ந்தெழுந்து தோத்திரித்து, சுவாமீ! இப்பிரதோஷகாலத்தி லெல்லாவகைத் தவரும் சிவத்தியானத்துட னிருக்கின்ற னர் வைகுண்டத்தில் விஷ்ணுமூர்த்தி மாத்திரம் இலக்குமியுடன் கலவித் தொழிலிலிருக்கின்றனன் இவனுக்கு வருங்கதியாது கட்டளையிட்டருள வே ண்டுமென்றனர் நந்தியெம்பெருமான் பிருகுவை நோக்கி, முனியே! இத்தகைய நிலைமையை யிகழ்ந்த நாரணன் மண்ணினில் மனிதனாகப் பிறப் பன் இவன் மனைவியையொரு இராக்கதன் கொண்டேகுவன். பின்னர் குரங்குக்கூட்டங்களைக்கொண்டு அசுரனைச்செயித்துப் பிரதோஷவிரதமனுஷ் டித்துச் சிவபூசையியற்றி வைகுண்டஞ் சேர்வனென்றனன் முனிவன் கேட்டுச் சந்தோஷித்துப் போயினன் நாரதர் இக்கதையினைப் பிரமனிடத் திற் றெரிந்துகொண்டு விடைபெற்றுத் திரும்புகையில், என்செய்வேன் இக்கதையினை யுடனே யாரிடத்து நம் சொல்லேனாகில் என் தலை வெடித்து விடுமே யென்று அங்குமிங்குமோடி யலைந்து ஒரு வனத்தில் ஒரு ஆலமரத் தடியில் ஒரு புற்றிருக்கக்கண்டு அதனுள் யாராவதிருப்பரென்றெண்ணி அப் புற்றில் தன் வாயைவைத்துப் பிரமா தனக்குச் சொன்னவற்றை யெல்லாம் சொல்லிவிட்டுப் போயினர்.

புற்றினுக்குள்ளிருந்த வேடன் யாவற்றையுங் கேட்டுணர்ந்து வெளி வருங்காலத்தை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் இவ்வேடனது யோகத் தீயின் சுவாலை யெங்கணு மெரிக்கக்கண்டு தேவர்கள் பிரமாவிற்குச்சொல்லப் பிரமன் புற்றினை யடைந்து தெய்வதச்சனாகிய மயனைக்கொண்டு மரமுத லியவற்றைக் களைந்து வான்மீகமுனியே! வெளிவருகவென்றனர். வேடன் முனிவடிவோடும்வந்து வணங்கக்கண்டு முனியே நாரதர் நினக்குக் கூறிய கதையை யொரு இதிகாசமாக வியற்றுகவென்று கட்டளை யிட்டேகினர். வான்மீகமுனிவ ரங்ஙனமே செய்து பல முனிவரோடும் வாழ்ந்து கொண்டிருக்கையில் ஓர்நாள் அவ்விடத்தில் மார்க்கண்டேயர் வந்தெழுந்தருளினர். இவரைக் கண்டவுடன் வான்மீகமுனி சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்து சமீபத்திருந்து தானியற்றிய இதிகாசத்தினைக் காட்டித் தன் யோக வரலாற்றினைச் சொல்லினர். மார்க்கண்டேய முனியை நோக்கி நீ யென்ன காரியஞ் செய்தனை, ஆயிரம் வருடம் யோகமிருந்ததனாலென்ன பிரயோசனம், அனேக மலைகளும் மரங்களும் எத்தனையோ கோடிகால மவுனமாக விருந்து யோகஞ்செய்கின்றன. அவை கண்ட விலாபமென்ன, ஒருநாள் செய்யும் சிவபூசைக்கு இது சமமாமோ பசுக்களின் கதைகளை ஆயிர ஆயிரமாக வியற்றிடினும் பதியாகிய சிவபெருமான் சரித்திரத்தைச் சொல்லுமடியார்க் குண்டாகிய புண்ணியம் வருமோ, சிவபூசை யொன்றினாலன்றோ சகல புண்ணியத்தினையும் பெறலாம், சிவபூசையில்லாத வீடு புலைச்சேரியாகும் அப்பூசையில்லா வீட்டினிலுண்பவனும் புலையனாவன் வேதங்கள் கொண்டாடும் விபூதிருத்திராட்சம்பூண்டு சிவபூசையியற்றி மூர்த்திதலந் தீர்த்த முறையாகத்தெரிசிக்கின்ற பெரியோரைக் கண்டவர்களும் புண்ணியராவரோ என்றனர்.

இந்தப் பிரகாரஞ் சொல்லிய மார்க்கண்டேயரைப் போற்றி அடியில் வீழ்ந்து அந்தோ! கெட்டேன்! கெட்டேன்! யோகத்தைச் சாதகமென் றெண்ணாது சாத்தியமென் றெண்ணினேன் பதிநூலறியாது பசுநூல் பேசினேன் அடியேன் கதியாது உய்யுமாறு திருவருள் புரிவாய் என்றலும் மார்க்கண்டேயர், முனியே! நீ இந்த வுலகத்தினைப் பிரதட்சணமாக வருவாயேல் எவ்விடத்து "நானிங்கு இருக்கிறேன்," என்ற அசரீரி கேட்கிறதோ அதுவே சிறந்ததலமாமெண்ணி அவ்விடத்துச் சிவபூசை செய்து உய்வாய் என்று கூறிப்போயினர். உடனே வான்மீகமுனிவர் பூமிமுழுவதினையும் வலமாகச் சுற்றி வருகையில் அசரீரிகேட்டது. கேட்டவுடன் துணுக்கலித்து ஒன்றுந் தோன்றாது சிறிதுநேர நின்று தெளிந்து அந்தத்தலம் பாலாற்றினுக்கு மேற்குக் கடற்கரைக்குச் சமீபமாக விருக்கக்கண்டு அவ்விடத்திருந்து சிவபூசை முறையே யியற்றிக்கொண்டிருக்கையில் சிவபெரு

மான ஒரு வன்னி விருட்சத்தின்கீழ்க் காட்சிகொடுத் தெழுந்தருளத் தரிசித்துத் தோத்தரித்து நின்ற முனிவரனைப்பார்த்துச் சுவாமியானவர் அறிஞ! நினக்கு வேண்டும் வரங்களைக் கேட்டிடுதி யென்றனர். வான்மீகர் பணிந்தெழுந்து ஆண்டவ! நின்னைத் தரிசித்த மாத்திரத்து என்பாவமனைத்து மொழிந்தது நான் பூசித்த இச்க்ஷேத்திரத்தினுக்கு என் பெயரால் திருவான்மியூர் என்று வழங்கவேண்டும், தேவரீர் சிரசிலுள்ள கங்கையினின்றுஞ் சிலநீர்த் திவலைவிட்டதுண்டாக வேண்டுமென்றனன். அக்கணமே முதல்வன் தனது சடாபாரத்திலுள்ள கங்கையினின்று நீர்ச்சிந்த அது ஐந்து துளிகளாய் பூமியில் வீழ்ந்து கிழக்கில் சனமநாசனி யென்றும், தெற்கில் காமநாசனி யென்றும், மேற்கில் பாபநாசனி யென்றும், வடக்கில் ஞானதாயினி யென்றும், நடுவில் மோட்சதாயனி யென்றும், ஐந்து தீர்த்தங்களாயின. சிவபெருமான் முனியே நினவிருப்பத்தின்படி ஐந்து தீர்த்தங்களை யுண்டாக்கினோம் நீ இந்த ஞானதாயினியிற் படிந்து சகல ஞானங்களையும் பெற்று வாழக்கடவை! இன்றையதினம் பங்குனிமாதம் பௌர்ணமியாகையால் வருடந்தோறும் இத்தினத்தில் நம்மைத் தரிசித்தார் யாவருக்கு மோட்சந்தருவோம் நீ யெப்போதும் நம்மைத் தரிசித்துக்கொண்டு இவ்வூரில் வாழ்வாயாக வென்று கூறிமறைந்தனர்.

வான்மீகர் பூசித்தபடலம் முற்றிற்று.

இரட்சசு சென்மநாசப்படலம்.

நான்முகக் கடவுளின் கொட்டாவியிற் குரங்கு ரூபமாய இரட்சசு என்பவன் பிறந்து, சத்தியலோகத்திற் சஞ்சரித்து வந்தனன். பிரமாவானவர் தனது உலகத்தி னொருபக்கத்தில் கலியாண தீர்த்தமென்று ஒரு தடாகமுண்டாக்கி இதில் யாராவது முழுகுவாரேல் அவர்கள் பெண்ணுருவமடைவரென்று ஆணையிட்டு வைத்தனர். ஒருநாள் இரட்சசு அத்தடாகத்தின் கரையிலுள்ள ஒரு மரத்தின் சமீபம்வந்து அம்மரத்தின்மீது ஒரு கிளியிருக்கக் கண்டு அதனைப் பிடிக்கத் தாவியேறுகையில் அது பறந்துபோய் விட்டது, அம்மரத்தினுனியினின்றுங் குளத்தைப் பார்க்க அசனுள் தன்னிழலைக்கண்டு ஓ! ஓ! இதில் என்னைப்போ லொருவனிருக்கிறான் அவனை யிப்போதே கொல்லுவேனென்று அபிப்பிராயங் கொண்டு குதித்து ஒருவனையுங் காணாமல் கரையேறத் தான் பெண்ணுருவாயிருக்கக்கண்டு வெட்கிச் சமீபத்திருந்த வொரு காளிகோயிலைக்கண்டு வணங்க அத்தேவி வெளிவந்து இரட்சசே! உனக்கு வாய்ந்த பெண்ணுருவம் நின்றந்தையாலதான் மாறும் அதுவரையிற்

ஆறுமாதம் பெண்ணாகவும் ஆறுமாதம் ஆணாகவுமிருப்பா யென்றனள். இரட்சசு அவ்விடம் விட்டுத் திரும்பி, எனது ஆணுருவத்தைக் கிரகித்துக்கொண்டு எனக்குப் பெண்ணுருவத்தைக் கொடுத்தவன் இந்தக் குளத்துக்குளிருந்தவன்தான் அவன் எந்தவுலகத்திலாவது ஒளித்துக்கொண்டிருப்பான் அவனை இப்போதே தேடிக்கண்டு பிடிப்பேனென்று, இந்திரனுலகஞ் சென்று தேவேந்திரன் சபைக்குப் போனவுடன் அவன் கண்டு மோகித்து இரட்சசையிட்டுக்கொண்டுபோய் தனது மாளிகையிற் புணர வாலி பிறந்தனன். இரட்சசு அவ்விடம் விட்டுத் திரும்பச் சூரியன்கண்டு காதலாகித் தனது உலகத்திற்குக் கொண்டுபோய் ஆலிங்கனம் செய்யச் சுக்கிரீவன் பிறந்தனன். பின்னர் இரட்சசு அங்குமிங்கு மலைந்துகொண்டிருக்கையில் வேதன் நாரதமுனிவரை யழைத்து, முனியே! எனது கொட்டாவியிற் பிறந்த இரட்சசு பெண்ணுருவமாய் அலைந்துகொண்டிருக்கிறபடியால் நீ சென்று பிடித்துவந்து நான் பல வரங்கள் பெற்ற தலமாகிய திருவாளமியூரிற்கொண்டுபோய் சென்மநாசனி யென்னுந் தீர்த்தத்தில் முழுகுவித்துப் பெண் சென்மத்தை நீக்கி என்னுலகம் கொண்டுவருவா யென்றனர். அங்ஙனமே நாரதர் தேடிப்போய் சந்திரனுலகத்திற் கண்டுபிடித்துக் கொணர்ந்து பிரமன் கட்டளைப்படி செய்து சத்தியலோகத்திற் சேர்த்தனர்

இரட்சசுசென்மநாசப்படலம் முற்றிற்று

பார்த்தசாரதிபாபநாசப்படலம்.

நாராயணமூர்த்தி வடமதுரையிலே வசுதேவனுக்குந் தேவகிக்கும் புத்திரனாய்ப்பிறந்து, ஆயர்பாடியி னந்தனிடத்து மவன் மனைவி யசோதையிடத்தும் வளர்ந்து பலராமனுக்குத் தம்பியாய்க் கிருஷ்ணனென்னும் பெயர் பூண்டு வளருகையில் இவன் மாமன் கஞ்சன் கேள்வியுற்று இவனால் தன்னுயிர் நீங்குமென்று அசரீரிபாலுணர்ந்து, இவனைக்கொல்லும்படி பூதகி யென்னுமரக்கியை யனுப்பினன். அவள் அழகிய பெண்ணுருவங்கொண்டு குழந்தையை மடிமீது வைத்துப் பாலூட்டப் பாலுண்ணுவதுபோல வவளுயிரையுமுண்டனன். தொட்டிலினித்திரை செய்கையிற் காலுதறியுதைக்கையில் அவ்வுதையுண்ட சகடந்தூளாயின அச்சமயத்து ஒருவன் கண்ணனைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்திலெழும்பவு மவனை விழிபிதுங்கத்தாக்கிக் கொன்றனன் தவழ்ந்து விளையாடி மண்ணுண்ணக்கண்ட யசோதை யொரு சிறுகோல் கொண்டோச்ச வாய்திறந்தழ வாரம்பித்தனன் அப்போதவன் வாய்வழியே சர்வாண்டங்களையுங் கண்டு வியப்புற்று உடலே மறந்து எடுத்தணைத்து முத்தமிட்டுக் கீழேவிட்டுத் தயிர்கடையச் சென்றனள். கண்ண

னயலார் வீடுகளிற் சென்று உறியைத்தாவி வெண்ணெய் முதலிய திருடி யுண்ண தாய் பிடித்துவந்து உரலுடன் சேர்த்துக்கட்டிவைத்தனள் உரலை மெல்லவிழுத்துக் கொண்டு சென்று இரண்டு மருதமரங்களி னடுவிற்றுக்க அம்மரங்கள் முறிந்து வீழ்ந்து பழைய வடிவங்களைப் பெற்றுப் போயின. கண்ணன் பசுக்கூட்டங்களை மேய்த்துக்கொண்டிருக்கையில் ஒரு அசுரன் கன்றுருவங்கொண்டுவரவு மதனைத் தூக்கி விளாமரத்தின்மீது வீசிக்கனி யுதிர்த்து அவ்வசுரனுயிரைப் போக்கினன் மற்றோரசுரன் பட்சியுருக் கொண்டுவந்து கண்ணனை விழுங்குதலு மவன் வாயினுழைந்து இரண்டாகப் பிளந்துவிட்டனன் மலையடிவாரத்தோர் நாள் இராக்கதனொருவன் வாயைத் திறந்துகொண்டிருக்கக் கண்ணன் குகையெனவெண்ணி நுழைந்து உண் மையறிந்து உடனே கொன்று அவன் சாபத்தை நீக்கினன் பிரமாவான வர் பசுக்கூட்டங்களையும் இடையர் பிள்ளைகளையும் கவர்ந்துகொண்டு மறைய உடனே அப்பிரமன் வெட்கமடைய யாவரையுஞ் சிருஷ்டித்துக்கொண் டனன். யமுனை தீரத்தின் சமீபத்துற்ற வோர்மடுவின் விஷநீரை ஆயர் பிள்ளைகளுண்டு மடிய அவர்களை யெழுப்பி அம்மடுவிலிருந்த காளிங்கனென் னும் பாம்புமேலேறிநடித்து அப்பாம்பின் மனைவியர் வேண்ட விடுத்தனன், கண்ணனைப் பார்க்கும்படி வந்துகொண்டிருந்த நந்தனை அக்கினிவளைந்து கொள்ள அவை முழுவதினையும் வாரியுண்டனன் தன்னோடு விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளையுந் தீசூழ அதனையு முண்டனன் இடைப்பெண் கள் தங்கள் ஆடை முதலியவற்றைக் கரைமீது வைத்து மடுவிலிறங்கி ஸ்நானஞ் செய்து கொண்டிருக்கையில் கண்ணன் அவர்கள் வஸ்திரங்களை யெடுத்துக்கொண்டு சமீபத்துற்ற ஒரு புன்னை மரத்திலேறி யிருந்து அவ் வாய்ச்சியர் பலவிதமாகக் கேட்டுங் கொடாமல் வெளியேவந்து நிர்வாணமாய் நின்று அஞ்சலித்தவர்க்கே கொடுத்து யாவருக்குங் காதலூட்டினன். அவர்கள் மயங்கிக் கண்ணனைச்சூழ்ந்துகொள்ள அவர்களோடும் பற்பலவகை யான லீலைகளைச் செய்தனன். யமுனை தீரத்தொருநாள் வேய்ங்குழலை வாயி னில் வைத்துக் கண்ணன் பாடுதலும் குடத்தியர்கள் கேட்டோடியும் வந்து பிரவசராய் வேண்ட அவர்களொவ்வொருவரோடுந் தனித்தனிசையோ கஞ்செய்து சந்தோஷிப்பித்தனன் சரஸ்வதி தீரத்தில் தனது சுற்றத்தின ரோடும் பிராமணரோடுஞ் சென்று சிவபெருமானுக்குத் திருவிழாக்கொண் டாடி மகிழ்ந்தனன். தனது தந்தை நித்திரை செய்கையில் ஒரு பாம்பா னது விழுங்கக்கண்டு அதனைக்கொல்ல அது பழையவரக்கனுருவைவாய்ந்து விடைபெற்றேகின. தான் யமுனைதீரத்திலுலாவி வருகையிற் சங்கசூடா னென்பவன்வந்து தாக்க அவனைக்கொன்று அவன் கரத்திருந்த மணியை யெடுத்து பலராமற் கீந்தனன். தபசுநிலையுள ஏருதுருவந் தாங்கிவந்த வோ ரவுணனை யோரறையால் வீழ்த்தினன்.

இத்தகையவரிய செயல்களைக் கஞ்சன் கேள்வியுற்றுக் கேசி யென்பவனைக் குதிரையுருவத்தோடு மனுப்பிக் கண்ணனை மாய்க்க வுத்தரவளித்தனன். அவ்வாறுவந்த குதிரையின்வாயில் கரத்தைக் கொடுத்துத் தூக்கி வீசி யெறிந்தனன். மயன், எசசன், வியோமனென்பார் கானவா மக்களைக் கொண்டுபோய் ஒருமலையின் முழையிலடைக்கக் கண்ணனுடனே மீட்டுக் கொண்டனன் கஞ்சனிவையனைத்தையு மறிந்து கோபாவேசத்தனாய், மல்லாகளை யழைத்து இங்குவருங் கண்ணனோடு யுத்தஞ்செய்து அவனையுமவனண்ணனையுங் கொல்லுவீர்களென்று கட்டளையிட்டு அவர்களை யிட்டுக் கொண்டு வரும்படி அக்குரூரனென்பவனை யனுப்பினன் அவன் சென்றழைக்க வவன் பின்னே பலராமனோடு கண்ணன் மதுரைக்குச் சமீபம் வந்து வழியிலெதிர்பட்ட அரசனது வண்ணானைக்கண்டு ஆடைகேட்க அவன் மறுக்கவுமவனைக் கொன்று கலைகளைப் பறித்து யாருக்குமீந்து தானுமுடுத்திக்கொண்டனன் பின்னர் அரசனுக்கு ஆபரணமணிவோன் பலலணிகளோடும் வர வாங்கிப் பூண்டுகொண்டனன், கூனியொருவள் பல சந்தங் கொணர்ந்து எந்த வேற்று அவள்கூனை நிமிர்த்தி விட்டனன் உடனே யரசனது விற்சாலையினுழைந்து அங்கிருந்த வில்லுகளை முறித்துச் சபையினுழையு வெதிர்த்த குவலயாபீடமெனனும யானையை வாலைப்பிடித்துச் சுழற்றி மோதிக்கொன்று முன்வந்த மல்லரை வீழ்த்திச் சிங்காசனத்திருந்த கஞ்சன்மீது சிங்கம்போற் பாய்ந்து உயிரைக் குடித்தனன் தேவாள் பூமாரி பொழிந்து ஆர்த்தனர்

பின்னர் கண்ணனும் பலராமனுங் காசிக்ஷேத்திரத்திற்குச் சென்று சாந்திபனி முனிவரிடத்து எட்டெட்டுக்கலைகளையு மறப்பந்து நான்கு தினங்களில் கற்றுத் தேர்ந்து அவருக்குப் பாதகாணிக்கையாக அனேக வருடங்களுக்கு முந்தி முதலையாலுண்ட அவர் குமாரனை யமலோகத்தினின்றுங் கொணர்ந்து கொடுத்து மீண்டு மதுரையிலேவாழ்கையில், சராசந்தன் எதிர்த்துப் பதினேழுதரந் தோற்றனன் கலவயவனென்பான் பலசேனையோடு மதிர்க்க அவனுக்குத் தோற்று விட்டவன்போலு மோடி ஒரு குகையில் வருசெய்துகொண்டிருக்கு முசுகுந்தன் பின்னர் மறைந்தனன், கலவயன் கண்ணனைக் காணுது முசுகுந்தனை உதைக்க வவன் கண்விழித்தெரித்தனன் பின்னர் அவ்வரசனுக்கு வேண்டிய வரங்களீந்து திரும்புகையில் சராசந்தன் வரக்கண்டோடி யொருமலையின் முழையினுழைந்தனன் சராசந்தன் அம்முழைக்குத் தீவைத்து விட்டேகவுங் கண்ணன் குதித்து வெளிவந்து மதுரையைச் சார்ந்து சமுத்திரத்தின் மத்தியிற் பன்னிரண்டுயோசனைகளாநீளத்தில் துவரையென வொருபட்டணமுண்டாக்கி வாழ்ந்து வருகையில், ‘யெர்ந்த நாட்டுச் சுகவிரோதயன் மகளைப் பலராமற்கு விவாகஞ்செய்வித்து, சிசுபாலனுக்குக் கொடுக்கவேண்டு மென்றிருந்த விதாப்ப நா

டு உருக்குமணை முதலானவர்களை அவ்வுருக்குமணியுள்ளிட்டோர்மேல் இச்சைவைத்து யுத்தஞ் செய்து சாணூரன் முதலான பேர்களைச் செயித்து, சத்தியபாமை, காளிந்தி, சாம்பவதி, மித்திரவிந்தை, சத்தி, இந்துமதி, இலக்குமணை இவர்களையு மணந்து, பதினாறாயிரங் கோபிமாரோடும் வாழுகையில், சாம்பவதிக்கு மாத்திரம் புத்திரனில்லாத குறையால் உபமனிய பகவானை யடுத்துச் சிவதீட்சை பெற்றுச் சிவலிங்கபூசை செய்து சாம்பனே முதலான குமாரர்களைப் பெற்றிருந்தனன்.

இங்ஙனம் வாழுங்கையில் அஸ்தினபுரியில் பஞ்சபாண்டவர்கள் துரியோதனனால் நாடிழந்து வனவாசஞ் சென்று திரும்பி வந்து கேட்டும் நாடு கொடாமையால் சாரங்கபாணி துரியோதனன்பால் தூதாகச் சென்று சமாதானஞ் செய்யமுடியாததனால் பாரத யுத்தத்தில் அருச்சுனனுக்குச் சாரதியாக இருக்க இசைந்து யுத்தத்திற்கு ஆரம்பித்த போது களத்தில் இருதிறத்தாரும் வர அருச்சுனன் பகைவரைப் பார்த்துக் கண்ணனைச் சாரதியை நோக்கிச் சொல்லுவான்: மைத்துனா! இங்கிருக்கின்றவர்கள் யாவருஞ் சுற்றத்தார்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்களை யெல்லாம் கொன்றுவிட்டு எதற்காக நாம் வாழப்போகிறோம்? இவர்களையின்றி வையாண்டவர் ஒருவரையும் காணோம். ஆகையினால் இவர்களை யெல்லாம் கொன்றுவிட்டு இந்த மண்ணை யாளேன் என்றனன். சாரதி அருச்சுனனை நோக்கிப் பார்த்தனே! இவ்வுலகில் வியவகாரத்திற் சத்தியமென்று சொல்லும் கருமங்கள் யாவும் பாரமார்த்திகத்தில் யாதொரு பயனுமில்லையாய் முடியும். பலகுடங்களிலுள்ள ஆகாயமுற்றும் ஒன்றாயமே போல சீவகோடிகள் யாவும் பிரமமேயாகும். இந்த உண்மையையறியாது அறிவீனத்தால் பேதம் பாராட்டிக் கருமங்களிற் கட்டுண்டழிவர். நானும் பிரமம், நீயும் பிரமம், இனைசையாவும் பிரமம், பஞ்சபூதங்களும் பிரமம், பந்துக்களும் பிரமம், சொல்லியவும் பிரமம், எல்லாம் பிரமமேயாகும். ஏகமாகிய பிரமந்தானே போக ரூபமாக நின்று அப்போகத்தை யாவருக்கும் ஊட்டுதலால் நீயேன் வீணாக சோகமுற்றாய்? உடனே யுத்தஞ் செய்குவா யென்றனன்.

இந்தப்பிரகாரம் மருட்டலுற்று அருச்சுனன் வீராவேசத்தோடு பதினெட்டுநாள் கண்ணனின் பலசந்திரங்களால் யுத்தஞ்செய்து வெற்றி புனைந்து தன் தமையன் தருமனுக்கு முடிசூட்டினன். இவ்வகையிற் பாரதப்போர் முடியுங் கண்ணன் தன்னுடைய நகரநோக்கிச் செல்லுகையில் வழியிலு முனிவர்கள் கண்ணன் திருவடியில் வீழ்ந்து பற்பலவிதமாகத் தோத்திரித்து வணங்கி எதிரே நின்று, முனிவர் கூறுவர், பார்த்தசாரதியே! இவ்வுலக நன்மையின் பொருட்டு நீ அவதரித்தாயாயினும் உன் நியமத்தை மறந்து வஞ்சகப்போர் முடிப்பித்தனையன்றி, கின்னர தோழன் அருச்சுனனுக்கு வெற்றியுற அச்சமயத்தில் அவனை மருட்டிச் சற்காரியமாகிய சிவபூசை யாதியன முற்றுக

கேட்டபோதும் அதை விசாரத்தினுக்கேயென்று கூறினை, வேதவுண்மை நீயறிந்திருந்தும் அவன் மயங்கும் வண்ணம் அசசமயங் கூறினையாயினும், இதுண்மையென மறைவாக நம்பிக்கெடுத்தற்கேதுவாயினமையின், நினக்குப்பாவம் வந்தெய்தியது, அதையொழித்தற்கு வகைதேடுதி யென்றனன். கண்ணன் அந்தோ! என்செய்கேன் விளையாட்டுக்காரியம் வினையாக முடிந்தது, இதையொழித்தற்குத் தேவரீரே உபாயங் கூறவேண்டுமென்ன, முனிவர், கிருஷ்ணா! எத்தகைய பாவங்களையும் போக்குவது சிவலிங்க தரிசனமேயல்லாமல் வேறில்லை. இத்தகைய தரிசனமும் சிறந்த தலங்களினேரிடில் மிகப்புண்ணியமாம். ஆதலின் சிறந்த திருவான்மியூர் சென்று பாவநாசத்தீர்த்தத்திற் படிந்து சுத்தனாகு கென்றனன். உடனே விடைபெற்றுத் திருவான்மியூரடைந்து பாவநாசதீர்த்தத்தின் மூழ்கி விபூதியணிந்து உருத்திராக்ஷம் பூண்டு மருந்தீசனைத் தோத்தரித்தனன். சுவாமி யெதிர்வந்து கண்ணா! என்னைத் தவிர வேறு பொருள் இல்லையென்னும் மறையுண்மையைத் தேர்ந்து வேறு விபரீதப்பொருட்படுத்தியருச்சுனனை மயக்குவித்தாயாகலின் நினைப்பாவம் பற்றியது. அதைப் பாவநாசதீர்த்தம் நீக்கியது இனி என்னுக்குள் வைகுண்டமடைதியென்று மறைந்தனன். பார்த்தசாரதி உடனே பலதரம் பூமியில் வீழ்ந்தெழுந்து வான்மியூரை வலம்வந்து மீளத் திருமயிலையிலுள்ள கோகடிகைத் தூரத்திலுள்ள ஒரு அல்லிக்கேணிக்குச் சமீபத்திற்றங்கித் தினமும் வாழ்ந்து, இரவுதோறுஞ் சென்று மருந்தீசனை வணங்கி வந்தனன். இவ்வண்ணம் பார்த்தசாரதிப்பெருமான் தங்கிய இடத்தைத் திருவல்லிக்கேணி யென வின்றும் வழங்குகின்றனர். அடியார்கள் சென்று போற்றிசெல்வமுதலிய பெறுவர். சிலகாலத்தின் பின் கண்ணன் வணங்கி வான்மியூரீசனுக்குப் பலதிருவிழா முதலிய செய்து தரிசித்துத் தந் நகரைச் சேர்ந்தனன்.

பார்த்தசாரதிபாவநாசப்படலம் முற்றிற்று.

இந்திரன் பாவநாசப்படலம்.

அத்திரிமுனிவர் தன் புத்திரனாகிய சந்திரனைப் பிரகஸ்பதி முனிவரிடத்திற் கல்வி கற்கும்படி விட்டனர். சந்திரன் அவ்வாறே படித்துவருகையில் அவன் றனது குருவின் பிரகஸ்பதியின் மனைவியாகிய தாரையை மோகங்கொண்டு அவளுக்கு வேண்டிய உபசாரங்களைப் பல முறையும் நடத்தி வருகையில், [illegible] தனக்குள்ளே சால்வானேயிருந்தான். அந்தோ! [illegible] இதைச் சொ[illegible]

வனே. ஆனால் இந்தத் தாரையினழகைப்போல மூவுலகத்துங்கண்டதில்லை. இவளைப் படைக்குங் காலத்தில் பிரமன் இவள்மீது மோகியா திருந்ததும் அதிசயமே யாகும். தானாக வலியவந் தணைந்தால் என ஊழானது மிகக நல்லதே. இவளைக்காணுந்தோறு மன்மதன் பாணங்களால் வெகு துன்பப் படுகிறேன். இவளோ தனது அங்க முழுவதையும் நன்றாக மூடுகிறதில்லை. நானே அவசரப்பட்டால் என்னதீமை விளையுமோ, இந்த வாசையைக் நடப்பதற்கு எந்த ஞானம் தலையெடுக்கும், இவள் வீடே குபேரன் வீடு இவள் தரிசனமே பெரிய தவம், இவள் பெயரைச் சொல்லுதலே மந்திர ெ பம், இவள் சையோகமே அத்துவிதம் என்று இவ்வாறு இருவரும் சந்த ... கள் கிட்டாமல் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறிருக்கையில் இந்திரனானவன் விருத்திராசுரனைக் கொன்ற பா வத்தைப்போக்கத் தானியற்றும் அசுவமேத யாகத்தை நடத்துதற்குப் பிரக ஸ்பதி பகவானுக்குத் திருமுகமனுப்பினன். இதைக் கண்ணுற்ற முனி வன், தனது மனைவி தாரையை நோக்கிப் பெண்ணே! இந்திரன் யாக காரி யமாக வென்னை யழைக்கின்றான் போய்வருகிறேன். நீ நமது ஆசிரமத்தில் ஜாக்கிரதையாக விருக்கக்கடவை, தலையை வாரிக்கொள்ளுதல், வாசனை ெ ண்ணெய் தடவல், திலதந்திருத்திடுதல், உயர்ந்தவஸ்திர முடுத்திடுதல், வ சனை புட்பஞ் சூடுதல், ஆபரணமணிதல், மிகக வன்னமுண்டிடுதல் இவை முதலிய, நாயகனில்லாத காலத்திற் கற்புடைய மாதர்கள் செய்யார்கள், ந இந்தத் தருமங்களை யனுசரித்து வாழ்வதுடன் நினக்கு வேண்டுங் காரியங் களை நமது சந்திரனைக்கொண்டு முடித்துக் கொள்ளுவாய், அவன் வயதிற் சிறியவனாயினும் புத்தியிற் பெரியவனே யாவன். இவனை வேறாக நினை யற்க, இல்லற நடத்துவதில் நிபுணன் நின்னை விழியினிமைபோலக் காப் பன், எனக்கு விடைதருவா யென்றனன்.

தாரை இவ்வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்துத் தலைகுனிந்து, தலை யைப் பெருவிரலினாற்கீறிக் கண்ணீர் சிந்த, வலது கரத்தைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு விம்மி விம்மி யழுது சொல்லுவள்: நாயக! நினது வீப தவார்த்தை போதும், இது உனக்கே யழகாயிருக்கிறது. நின்னைப் பிரிந் தனியாக வெப்போதாவது நான் வாழ்ந்த துண்டோ? ஏழையின்மீது ஏத வது கோபமுண்டோ? தங்கட்கு மனந்தா னெப்படி துணிந்ததோ? போய் வருக வென்று எப்படி சொலவேன் சொல்லேனேல், யாகத்தைத் தடுத்த பாவம் வரும், தேவரீர் தீர்த்த யாத்திரை செய்தத்தாலும், தீட்சைவகித்துக் கொண்டிருந்ததினாலும், உபாசனை முதலிய விரதங்களினாலும், முனிவர் கூட்டத்துடன் வாழ்ந்ததலினாலும், எனது ருதுதினங்களாலும் பல்நாள் நட கக்கு ஆலிங்கனமில்லாத நாள்கள் கழிந்தன. இருந்த காலத்தும் இத்தகை

அவதிவாயககுமேல நான் எவவாறு சகிதது வாழ்வேன, நினனைத தடுபப னேல் என கறபில் பஙகவரும் ஆயினும் எததனை நாளைகருள் வநதிடுவீரெ ன்பதை யாகிலுஞ் சொலலுக வென றனள

"பெணணே! யாக முடிநதவுடன வநது விடுவென, முப்பதுநாள எப்படி யாகிலுங கழிதது விடுவாய, போகவிடைதருவாயென்று தேவமநதிரி சென றனன் சூரியனு மேறறிசைச சாயநதனன குருவிறுடன சநதிரன வழித துணையாகச சிறிது தூரமபோய வருவதறகுள் தாரை சகியாது அதிசீககி ரம் அறுசுவையோடுங கூடிய அனனமுதலிய சமைததுப் பொன பாததிரங களிலமைதது வைதது, வாசப்பொடியுடன வெநநீா தயாாசெயது, தெருவா யறபடியில வநது எதிாபாாததுக கொணடிருநதனள் வநத சநதிரனைககணடு பால! நினகுரு தனது மனைவியைப் பாதுகாககுமபடி சொனன சொலலை மறவாது என வாாததையினையுந தடடாது இருககககடவை, பொழுது போயிறறு எழுநதிருபபாயென வழைததுககொணடுபோய ஒருஆசனததிருத தித தனது கைவளையல கலகலென்ன முகததில நீாருமப முததுமாலைச சிககுணண ஆடையைச சுடையளவுத தூககி நனறுகச செருகிககொணடு ஸ்நானஞ் செயவிததுக கலையாறறுடைததுக குடுமிககு வாசனையூடடி, வஸ திர முடுததுப புடபமுடிதது அனனம படைததுப் பருபபிடடு நெயவாாத துப பலவிதசறிகளுடன உணணச செயது விசிறிகொணடு விசிறி மிருது வான சரசவாாததைகள பேசிககொணடிருநதனள

சநதிரன உணடபின்பு எழுநதிருநது தாரை தனனிடததது அதிக மோ கமாயிருககிறுளெனற குறிப்பறிநது சமீபததுள்ள ஒரு நநதவனததிற போ யிருநதனன தாரை யுடனே * துவாவிரையோடு ஓமாலிகையிலூறிய நீரிறகு ளிதது, சரிகைமேகலைபூணடு, படடு இரவிககை யணிநது, வாசனை சடவிப் பலவாபரணநதரிதது, புடபஞ்சூடிககொணடு சநதிரன தஙகு நநதவனநோக கிவர வாரமபிததனள சிறிது இரவிககையைத தளாததித தனது சிறிது பிதுஙக அடிககடி கரததால தலையைததடவிக கொண்டு, பககததிருககும் செடிகளில புடபஙகொயது, சிறிது வாயககாலகளைததாணடி மரததுனிழ

* துவாவகைபதது - பூவம திரிபலை புணாவன சருஙகாலி, நாவலொடு நான்மரம. விரைவகை ஐநது - கொட்டநதருககநதகரமகிலாரம, ஒட்டிய வைநதுமவிரை - ஓமாலிகைவகை முப்பததைநது - இலவஙகம பசசிலைக கசசோலமேலம், குலவியநாகணஙகோடடம - நிலவிய, நாகமதாவரிசிதக கோலநனஞரி, வேகமிலவெணகோடடமேவுசீா - போகாத, கததூரிவேரி விலாமிசசைசகமரேணுகமாஞசியுடன, எணணுஞசயரோகமினபுகழு - கனனி யிளய, புன்னைநறுநதாது புலியுகிாபூஞசரளம், பினனுதபாலமபெருவகுளம- பனனும, பதுமுகநுண்ணேலம்பைஙகோடுவேரி, கதிாநகையாயோமாலிகை.

விற்சென்று வண்டுக்கூட்டங்களின் பாட்டுகளுடன் தானும்பாடி, பல சரசத்துடன் சென்றனள். சந்திரன் கண்டு சகிக்கவொண்ணாத பரவசத்தாற் புத்தி திகைத்து ஓ! ஓ! நமது தவமே திரண்டு உருவாய் வருவதுவோ, என ஊழின் பெருமை நன்று! நன்று!! மூவுலகத்தும் இத்தகைய வுருவமுமுண்டோ, வச்சிரத்தினாலேயே யமைந்த தேகமோ, இது பிரமன் படைப்பிலடங்குமோ, நட்சத்திரக்கூட்டங்களெல்லாம் இவள்முன் என்னவாகும், இவள் தேகத்திலுற்ற அங்கமொன்றினை இன்னதற்குவமையென மதிப்பவர் ஏழை யறிவையுடையவரேயாம். இவள் தேகத்தினழகைக் கவர்ந்து கொண்டு உலகத்திலுள்ள பொருளனைத்தும் பிரகாசிக்கின்றன. இத்தகைய வழகி தனித்து இங்கு வருவாளேல் மன்மதனாயினும் சரணமடைய மாட்டானோ, இவளழகின் சாயையால் இந்த நந்தவனம் முழுவதும் மிகவழகாகத் தோன்றுகிறது என்று இப்பிரகாரம் வியப்புற்றுத் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டிருக்கையில் தாரை சமீபித்து வந்து குஞ்சிரிப்புடன் வாசனை கமகமெனக் குந்தித் தனது மனக்குறிப்பைக் காட்டினள்.

சந்திரன் கண்டு பரவசமாகி உடலஞ் சில்லென்ன, தனது காதலையுள்ளடக்கிக் கொண்டு ஆண்மையைவிடாது என் தவம் பலித்துவிட்டது, இவள் தனிமையாயினள் ஆயினுமாசரை நம்பப்படாது இன்னமுந் தடுப்பேன் இவள்போற் குறிப்பின்படி நடப்பேன் என்று எண்ணிக்கூறுவான் தாரையே! நான் தனியாயுள்ள இடத்தில் நீ வரலாமோ, வீட்டில் வேலையில்லையோ, நாயகனில்லாத சமயம் இத்தவிதமாக வலங்கரித்துக்கொண்டிருப்பது கற்புடையார்க்கழகாகுமோ, நாமிருவருஞ் சுத்தமாக விருந்தாலும் அன்னியர்கள் ஏசாரோ? அதிசீக்கிரம் போகவென்றனன். இந்தப் பிரகாரங் கூறிய சோமனைத் தாரைநோக்கி உடுபதியே! நின்னிடத்து நான் வந்தாலுலகமென் சொல்லும், உன்னைக் காணுதற்கே அலங்காரம் பூண்டேன், வீட்டுவேலைகளை யியற்ற வேறு காலமில்லையோ, உன்னைக்காட்டிலும் வேறு செயலென்ன விருக்கிறது, என்னைப்போலுஞ் சகிப்பவரொருவருமில்லை, பூர்வதவத்தின் நல்வினையால் உன்னைத் தனியே யிங்குக் கண்டேன். உன்னுடைய கட்டழகை எண்ணி எண்ணி மோசித்தேன், நினது மார்பைத் தழுவ விம்மிய தனங்களை என்றுகரங்களால் அடக்கி அடக்கி யாண்டுவந்தேன், மன்மதனாற்பட்ட துன்பத்தைக்கூற என்றிறமாமோ, வஞ்சமில்லாது கூறுவேன் நின்னழகு என்னைக் கொளுத்திவிட்டது, அதனால் நினது சரணடைந்தேன் துரையே! உடனே ஆலிங்கனஞ் செய்கவென்றாள்.

சந்திரன் கேட்டுத்திகைத்துப் புளகாங்கிதங்கொண்டு, கூட்டியசெய்வதைக் கொண்டாடி மீட்டுஞ்சொல்லுவான். தாரையே! நீ நல்லமரபிலே பிறந்

தாய தேவகுருவின மனைவியானுடைவிடங்களில் அழுந்தும்படியாகவுந யாயினை, நீயிவவாறு நடததல் உலகதரந்தாள, பாடாள், முழநதாள், அல் சிப்பையேல தேவா நகையாரோ நாம கழுதது, கபோலம, வாய், கண், நோயுளனேனும, தீமையுளனேனும, மம அமுததிலை யாராயநது, சஙகு நாயகனுய வாயந்தபினனா அவனேூரனவும், கணகள் சிவப்பேறவும், இசறகு மாறுபடடால தாயுநதனமபவும, கணடததில மயில், புறு, சிகிவிட முயலுவாாகள, சுறறததாா செமபோதது எனகிற எணவித யால இந்த வபவாத நமககென்னததிறகு ஈ்யகாமவலவிககொடிபோல்ப்

காளை சநதிரனை நோககி அமபுலியே! நீ காரமைவததல, நிற்றல், னககுந செரியும், நீ சொலலுதல் மீனுககு நீநதகககாமபு,கோழி, பூனை, லும், இககதைகளை யெலலா மொருபககம சட்டிவைப்பாாய ஆவியொடு யோகமே ஆனநதம, அவாகளது மலையை யொதநத னங்களேதியபோது யாத நீ குறறஙகூறிக காலததை வீணாககழிககினறாய, விசடமாவேநது தை யிதுகாறும போதும, உன ஆசையை யடககிககொணடு வெளியேப் பிறகு பேசுகினறாய, சரணமெனறடைநத வெனனை அவமாவிடுதல் பாவமாகும், இநதத தேகமுணககடிமை எனன அவமானம வநதாலும எனக கு துனபமிலலை எனனழகை யெல்லாங காட்டினிலவாககழிநதிட்டேன நினனதாரததைத தநதால நினககு மிகப்புணணியம, சினனயது முதல் நானினனை வளாததேன பெரியவனாயினபின என் சொல்லைத் தடுககினறாய, உனனையணையுமுரிமை யெனககுணடு எனபது மறநதனைபோலும, நீ படிததபடிபபின சாமாாததியததை யிஙகுககாட்டவேணடாம,நாயகன சொலலைத் தடுததல் பாவமெனறு சொல்லினை, உனனை நான நாயகனுக கொணடபினபு உன சொல்லைததடுததததுணடோ, நாயகனிடததுமனைவி விடுக கொளளும விருப்பததை முடிககாதிருததல் நாயகனுககழகாகுமா ஆசையால நீயே தவறிவிடடாய தாருகாவனததிலும, ஆயாபாடியிலும நடநத சஙதை நாமறியோமா, பிரமா தான் பெறற சரஸவதியை மனைவியாககொணடான, கணணன தனது அததையாகிய ராதையை யணைநதிட்டான, கவுதமன பததினியை இநதிரன புணாநதான், பிருநதையை விஷணு சோநதான இவாகளெல்லாந தேவரெனறு முனிவரெனறு இனனமுமிலலையோ, மாதர்கட்குத தககபடி இனபததைக கொடுகக சததியிலலாத மெலிநத முனிவாகள் தஙகள மனைவியா பிறரைநாடிச சுகததையனுபவிப்பரெனறு பனையோலைகளி லெழுதிப் பயமுறுததி வைததிருப்பதை யுணனைபோனறோா நமபி பலனிழநதாா, இது உணமை மாதாகள் சுகததை யுணராத முனிவாகள தவஞசெயது தேகததைச சுமையாததாஙகிக கொணடு காட்டிலறிரிவா. புதுமணப பெணகளை யணைநது வாழ்வதிலுஙகல்வியிலே தோயநதுளள நலலாா சையோகமே பேரினபம. இநத வுண்மையை என்

ப்புராண

ம பாவததை நானேற்றுக்கொள்ளு
கும புண்ணியததை நீயேறறுககொள
ல, இனி யொருககணமும தாளேன
ழ்ப்பதிற பிரயோசனமிலலே, இதுவை
வழஙகாயென று அதிசிககிறஞ் சநதிரன

கட்டிககொண்டு பரவசமாய மூர்சசித்துச்
தளிநது பெருமூச்சிட்டு அதரமுண்டு பலதர
னறு முதநுமாலேசள சிககுணண, குழலவிழ காற
யாவையரும்ப வலமிடமாகப்புரண்டனா பினனா தாரை
சுறறு ஆடையோடு மற்றைய வாடையைததோளின்மீது
கொண்டு அவிழநது வீழ்நத கூநதலே இடது காததிலேநதி வலது
ாற சநதிரன காததைப்பிடிததுககொண்டு தன்வீட்டிறகுள்சென று கட்
டிலேறியவுடன, சநதிரன தாரையை யணைதது அவள முகததில் புனன
கையரும்ப ஆபரணம பிரகாசிககச்செவவாய துடிதுடிகக, தனஙகள் விமம
இரவிககையவிழ இடை நநெநெங்க, சரசசல்லாபஙகளோடு, விழிகள் சிவகக
இரண்டுபெயோதரஙகளே வருடி, ஆடையையவிழத் தெறிநது நிதமபததைத்
தடவி, கூநதல அவிழநதுசோர, கொடிபோலச சுறறல, மரததைப்போலே
றல், எள்ளரிசிபோற கலததல், பாலநீரபோ லொன்றுபடல், தொடையா
னெருககல, குறிகள சோததல, கொஙகை யழுததல, நெற்றி பொருததல
என்ற எணவகை ஆலிஙகனஙகளே நடாததி, நுசலே நீவி, முததமிட்டு
உசசி, கொஙகைகளினடு, சகனம, முதுகு, கனனம், பிடர், நெற்றி, தொ
டை இவவெட்டிடஙகளில முறையே கைவிரல குவிததுததட்டல, குட்
தல, அஙகையாறறட்டல, பையககுததல, தாசசனியாலூனறல், தாசசனி
யாலு மததியமததாலு நெருககல, மேறபடி விரலகளே மடககிப பறறு
குறடுபோலப் பிடிததல', தாசசனியாறறருவுதல் என்ற எண்வகைததாட
னஙகளேசசெயது, கண், கபோலம, கொஙகை, நெறறி, கைமமூலம், நிதம
பம், வாயிதழ், உநதி என்ற எட்டிடஙகளிலினுஞ் சுமபனமியறறி, கழுதது
னிடததுந தனததினிடததும வளேவாகவும், கடிததடததில் எதிரெதிராகச
சோததும, மேறகூறிய மூனறிடததுந நுனிவளேவாகவும், கொஙகையினடிப்
புறததிலொன்று, மேறபுறததில மறறைய நாலுரேகைகளும, கொங்கைக
ளின முகட்டிடததுஐநதும, கொஙகையீனமீதும அலகுலினும் பின்பு
றததினு மூஙகிலிலேயைப்போலும அறுவகையாக நககுறிகளேயிட்டு, அத
ரததில் சிவபபுறவும, கபோலததும அதரததும வடுபபடாமலும, கபோ
லததில பலலுமிதழும பொருநதவும, அதரததில பல்லைதககவும, கைம்

மூலம், நெற்றி, மார்பு, தொடை, இவ்விடங்களில் அழுந்தும்படியாகவும் நகக்குறிகளை யமைத்து, பெருவிரல், புறந்தாள், பரடாள், முழந்தாள், அல்குல், நாபி, மார்பு, முலை, கைம்மூலம், கழுத்து, கபோலம், வாய், கண், நெற்றி, உச்சி என்ற பதினைந்திடங்களினும் அமுதநிலை யாராய்ந்து, சங்கு [illegible]யல் நெறியவும், பாதச்சிலம்புகலீரெனவும், கண்கள் சிவப்பேறவும், அதரம் வெளுப்புறவும், வியர்வை யரும்பவும், கண்டத்தில் மயில், புறா, அன்னம், காடை, வண்டு, குயில், கோழி, செம்போத்து என்கிற எண்வித புட்குரல்களைக்காட்டியும், கற்பகத்தைப் பின்னியகாமவல்லிக்கொடிபோல் பின்னிக்கொண்டு, மல்லாந்தல் ஒருக்கணித்தல், உட்கார வைத்தல், நிற்றல், குனிதல் என்ற ஐவகைக்கரணங்களோடும், குதிரை, பாம்பு, கோழி, பூனை, புலி முதலிய பலநிலைகளையும் புரிந்து, சிந்தையுடன் சிந்தையாய ஆவியொடு ஆவியாய ஒன்றுபட்டு ஆனந்தக்கடலின் மூழ்கிப் பேரின்ப மெய்தியபோது சூரியன் உதயமாயினன், இருவர்களும் கட்டில்விட் டிறங்கி வெளிவந்து நீராடி வேறுகலையாதி யணிந்து அடிசிலுண்டு நாளுளுஞ் சுகபோக மனுபவித்து வருகையில் இவர்கட்கு அஷ்டமத்திற் சனியென்ன தேவகுருவும் வந்து சேர்ந்தனர்.

தனது நாயகனைத் தரிசித்த தாரை எதிரோடி வணங்கிக் காலலம்பி அந்நீரைக் கண்ணிலொற்றிப் பீடத்தெழுந்தருளச் செய்து சமீபத்திருந்தனள். கணவன் மனைவியை நோக்கி ஏதாவது குறையுளதோவென்றனன். தேவரீரில்லாத குறையொன்றே யென்றனள். பின்னர் சந்திரன் வந்து வணங்க விபூதியீந்து நீ யெவ்வாறு காலங்கழித்தனை யென்றனர். தேவரீர் வருகையையே யெதிர்பார்த்துக்கொண் டிருந்து தாரை சந்தோஷிக்க நினது பணி தப்பாமற் செய்து வந்தனன் என்றான். குருகேட்டுச் சந்தோஷித்து வாழ்கையில் இருவருக்கு நடக்குஞ் சல்லாபங்களாற் குறிப்பிற்றோந்து பயமுற்றதைக் கேட்கத் தாரை யுண்மையைச் சொல்லி விட்டனள், உடனே இருவரையும் சபிக்க ஆரம்பித்தனர். தாரை பணிந்து ஐய! நடுநிலையை நாடுங்காலத்தில் தவறாதவர்கள் ஒருவருமில்லை, எதுவும் ஊழ்வினையின்படியே நடக்கும், குற்றம் செய்தவர்களன்றோ பரிகாரமும் ஆகமத்திற் கூறப்பட்டுள்ளது, பிரமன் முதலியோரும் மனங்கலங்கினரேல் ஏழை யெம்மாத்திரம், ஏதோ சிறுவர்கள் மயங்கி விட்டோம் மன்னிக்க வேண்டுமென்று வணங்க, தேவகுருவும் மனைவியின் குற்றத்தைப் பொறுத்துச் சந்திரனை நோக்கி நீ க்ஷயரோகத்தால் மெலியக்கடவை யென்று சபித்தனர். சந்திரன் அவ்விடம் விட்டுத் திரும்பித் தன் தந்தையிடஞ் செல்லுகையில் வழியில் நாரதரைக்கண்டு வணங்க, முனிவர் சந்திரனைப் பார்த்து, பால! என்னகாரியஞ் செய்தாய், காமமே பொய் கொலை களவு முதலிய பலதீமைகளுக்குங் காரணமாகும்

காமததாலிநதிரன் ஆயிரஙகண்கள் பெற்றான, காமததால் குபோ னொருகண் ணிழநதான, காமததா லாரணன அடைநத சாபஙகட்கு அளவில, காமத்தா லுண்டாகும் பாவங்கள பல. ஆகையால உனக்குக காமஙகாரணமாக உண் டான சயரோகமொழியத திருவானமியூாச் சென்று காமநாசனிதீாததது மூழ்குவையேல எலலாவினையுமொழியும என்றவுடன், முனிவாிடம விடை பெற்றுச் சென்று அததீாததத்து மூழ்கிச சொக்கநாயகியுடன மருததீசனைத தோததரிததுத தனது நோயநீங்கப் பெறறுத திரும்பித தனது தநதை அத திரிமுனிவாிடஞ் சென்று வாழ்நதனன்.

சநதிரனகாமநாசப்படல முறறிறறு.

சூரியன்பூசைபுரிநதபடலம்.

சூரியன பிரதி தினம் உதயமாகுநதோறு மநதேகமெனனுந தீவி லுளள இராககதாகள அறுபதினாயிரஙகோடிபோ வநது எதிாததுயுததஞ் செயதுவநதனா. அதனாற சூரியன சகிகக முடியாது ஒருநாளோட வாரம் பிததனன் தேவாகணஙகளா அசசமயததிலாகாயததில் அசாீாியுணடாகிச் சூரியனே! ஓடவேணடாம, சம்புததீவிலே பாலாறறின் வடககிலே சமுததிர தீரததிலேயுளள திருவானமியூா க்ஷேததிரததினை நாடி அஙகு எழுநதருளி யிருககு மருநதீசனை வணஙகில இராககதா பயமொழியு மெனனச் சொலலி யது. சூரியன கேட்டு எனனசெயவது எனனுடைய தொழிலைவிட்டு எஙங னஞ்செல்வேனென்று தககிததுககொணடிருககையில, நாரதமுனிவரொழுந் தருளி, சூரியனே! நினது தமபியாகிய அசனியெனபவனை யழைதது நின்க் குப் பதிலாகத் திருவானமியூருக கனுபபுவை யென்று சொலலிப்போயி னா, அஙஙனமே சூரியன அசனியையாழைப்பிததுககூற அவனுமஙஙனமே சென்று திருவானமியூரடைநது ஓரிரவினுககுள சூரியதீாததமென வொன் றுண்டாககி மருநதீசனை வணஙகிப் பலவரமேறறுச சூரியனுககு அறிவித துச சென்றனன் பினனா சூரியன தனனுடைதிககு மிராககதரா எதிாத துசசாடித தோற்கடிததுச் சுகமே வாழ்நதனன இசசூரிய தீாததததிலாடு வோரும இததீாததஙகொண்டு சுவாமிககு அபிடேகஞ் செயவிப்பவரும் தேவரேயாவா, எவாகளெனனெனன விரும்பி முழுகினுமவையாவுமடை வா, மநதிரஞ் செபந தருப்பணம, மகேசுரபூசை, இததடததருகிற் செயில் ஒன்றுககாயிரம பலனதிகமாகும், இததடததினருகிலிருககுந தருக்களின் மீது இரநீாபடுதலினால அவையுமோட்சததையே யடையும, பிரதிதினமும்

யுதனுள் மூழ்கித் திருவான்மியூரிலுறைவார் சிவமே யாவார். சூரியன் இர வில் பூசித்த தலமாகலின் சுவாமி இன்றளவுமே றகுமுகமாக விருக்கின்றனா.

சூரியனபூசைபுரிந்தபடல முற்றிறறு.

இந்திரன்சாபந்தீர்ந்தபடலம்.

அசுரர்களுக்குள் தலைமையினை வாய்ந்த அகிதவுடடிரனென்பவன் தவ மியற்றிப் பிரமனிடத்துப் பலவரங்களைப் பெற்று உலகங்களை யெல்லாஞ் செயித்து விண்ணுலகிற் சென்று இந்திரனோடு யுத்தஞ்செய்ய ஆரம்பித்த னன் தேவேந்திரன தன்னாலானவரையில் போர்புரிந்து முடியாமல அவ் வுலகத்தைவிட்டு மண்ணுலகத்திலிறங்கி இமயமலையின சமீபத்திலுள்ள பிருகுவின பன்னசாலைக்குவந்து சோர்ந்தனன் முனிவர்கண்டு எதிர் வண ங்கி அழைத்துக்கொண்டுபோய் ஆசனத்திலெழுந்தருளச் செய்து, நடந்த வரலாற்றினை விசாரித்து வருத்த முற்றுத் தனது ஆசிரமத்திலேயே வைத் துக்கொண்டிருந்தனர் ஒருநாள் பிருகுமுனிவர் புத்திரியினது அழகைக் கண்டு சகியாது இந்திரன் சமீபத்திற்சென்று ஒருமுத்தமீந்தனன் இதைக் கண்ணுற்ற பிருகுமுனிவர் இந்திரா! நீ இராக்கதனுகப் போகக்கடவை யென்று சபித்தனர், அங்ஙனமே வாசவன் இராக்கதனுயக் காட்டில் வாழ் ந்துகொண்டிருந்தனன். தேவர்கள் தங்கள் தலைவனை யிழந்ததால ஒருங்கு டப் பூமியிலுள்ள முசுகுந்தனைவேண்டலும அவன் உடனே விண்ணு ஞ் சென்று அகிதவுடடிரனைக் கொன்றுதான் அரசாட்சி செய்து வந்த னன்.

இந்திராணியானவள் தனது நாயகனைப் பிரிந்த துக்கத்தால் சத்திய லோகஞ் சென்று பிரமனிட முறையிட, பிரமன தேறுதலகூறி யனுப்பிய பின், நாரதனை யழைத்து அதிசீக்கிரஞ் சென்று தேவேந்திரன் கொண்ட இராக்கத உருவைமாற்றிவைபபா யெனனலும், முனிவர் இசைந்து பல விடங்கள்தேடி இந்திரனைக்கண்டு பிடித்துத் திருவான்மியூருக் கிட்டுக் கொண்டுபோகவும், எலலையை மிதிப்பித்தவுடன இராக்கதவுருவ மொழிந் தது. வாசவன் ஊருட்சென்று சென்மநாசனித் தீர்த்தத்தில் முழுகிச் சுத்த னுகி மருந்தீசனைப் பற்பல விதமாகத் தோத்தரித்து விடைபெற்றுத் தன்னு லகம் சென்று முசுகுந்தச் சக்கிரவாத்தியைக்கண்டு அரசாட்சி யேற்று வாழ்ந்தனன்.

இந்திரன்சாபந்தீர்ந்தபடல முற்றிறறு

பிரமன்றிருவிழாச்செய்படலம்.

கற்பமொன்று முடிந்து மறுபடியும் உலகமுற்பத்தியாகையில் நாராயணன் உந்தியினின்றும் பிரமன் பிறந்து தந்தையை வணங்கி நான் செய்ய வேண்டிய பணியைக் கட்டளையிடவேண்டு மென்றனன். விஷ்ணுவானவர் வேதனை நோக்கி மைந்தனே! எனக்கு நினக்கு மற்றையவுயிர்களுக்குந் தந்தையாயுந் தாயாயுந் தமராய் விளங்கும் பெருமானை நோக்கித் தவம்புரிந்து இந்த வண்டத்திலனந்தகோடிகளைப் பழையபடி செய்விப்பா யென்றனர், பிரமன் நாரணனைத் துதித்துப் பிரபுவே! வேண்டிய பலனை யதிசீக்கிரத்தின் கொடுக்குந்தானத்தை அடியேனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ன, நான்முகனே! வேதங்கள் கூடிப் பூசித்த வேதாசலத்திற்கும், நமது அம்மையார் மயிலாகவிருந்து வணங்கிய திருமயிலைக்கும் மத்தியிலுள்ள திருவான்மியூரினை நாடுதியென்று தந்தை கூறவு மிசைந்து பிரமாவானவர் அந்தத் தலத்தினை யடைந்து பதினாயிரம்வருடந் தவமுஞற்ற சுவாமி வெளிவந்து பிரம! நினக்கு யாதுவரம் வேண்டுமென்ன, இவ்வுலகத்திலுள்ள உயிர்வருக்கங்களைப் பழையபடி சிருட்டிக்க வேண்டுமென, அங்ஙனமே தந்தோம் நீ யாவையும் படைத்த பின்னர் இத்தலத்தில் நின்பெயரால் தட முண்டாக்கி எனக்குத் திருவிழா நடத்திவைக்கக் கடவாயென்று சொல்லி மறைந்தனன்.

அந்தணன் அங்ஙனமே எல்லாவற்றையு முண்டாக்கித் திருவான்மியூரில் பிரமதீர்த்தமென வொன்று எடுத்து அந்நீரால் சுவாமிக்குத் திருமஞ்சனஞ் செய்து பின்னரொருநாள் அகத்தியராதி முனிவர்களை யழைத்து அவர்களைக் கொண்டு ஆகமங்களை யெல்லா நன்குக விசாரித்து அவற்றிற் குறித்தபடி திருவிழாச் செய்யத் தொடங்கினர். தேவர்களெல்லாரு மொன்றுகூடி மருந்தீசற்குப் பல ஆபரணங்களையும் பல பீதாம்பரங்களையும் அணிந்தனர், மாடவீதியை யலங்கரித்தனர், தேரினைச் சிங்காரித்து வைத்தனர், எங்கணுந் தோரணங்கட்டினர், நவரத்தினங்களிழைத்த தம்பங்களில் வாழை கமுகு முதலிய கட்டினர், பூப்பந்தர்கள் சந்திகளில் தூக்கினர், வீதிதோறுங் கோலமிட்டனர் பங்குனிமாதத்தில் கொடியேற்றிப் பல விழாவாற்றி, முதனாள் முதல் பத்துதினங்கள் வரையில் பலபல வாகனங்களினிலேற்றி ஆனைமுகன் ஆறுமுகன் சண்டேசன் அம்மையாருடன் அரனுக்குத் திருவிழாவாரம்பித்து, காலையில் வீதிவலம் வந்த பின்னர் இரவில் மறையவர் வேதபாராயணம் சொல்லவும் நாரதாதிமுனிவர்கள் யாழ் வாசிக்கவும், குங்கிலியதூப மெங்கும் வீசவும், அடியார்கள் நாமாவளம்

ம், வெண்குடை நிழற்செய்ய, கவரி ஆலவட்டம் சாந்தாற்றி நெருங்க கொடிகள் தாங்கவும், எவ்விழுதற்கிடமின்றிப் பலர்சூழ்ந்தனர் சூரி சந்திரன் நட்சத்திரம் யானை சிங்கம்போன்ற நீவட்டிகள் முன்னும்பின் ...மந்த, பேரிகை, யாழ், கைப்படகம், பறை, முரசு, குடமுழவு, சின் ...பூரி, எக்காளம், சங்கம், தாளம், தண்ணுமை முழங்கவும் வெளிவந்த ...வீதிக்கோறும் கும்பம்வைத்தனர், வேதியர்கள் அட்டமங்கலத்துடனே ...களில் தேங்காய் தாம்பூலம் காசு கற்பூரத்துடனே வந்து தீபாராதனை ...பயவும், சிலவடியார் ஆடவும், சிலவடியார் பாடவும், மறைமுதல்வன வந் ...தான், கறைமிடற்றோன் வந்தான், வானமியூர் மருந்தீசன் வந்தான், என்று ...லபலவிதமாகத் தோத்தரிக்கவும் இத்தகைய ஆடம்பரத்துடன் நான்கு ...வீதியும் வந்து கோபுரவாயிலடைந்தவுடன் ஆதிசைவர் நிவேதனத்துடன் ...தீபாராதனைகாட்ட, அரமபையாதியர் தாளவிசைமருவிய நடனமிட ஆலத்தி ...மூற்றி எச்சரிக்கை சோபனம்பாடினர், நந்தியெம்பெருமான் முன்னரேக ...லயத்துட் பிரவேசித்துப்புண்ணியன் எழுந்தருளினன் இவ்வகையாகப்பத ...தினமும் பலவாகனம் விமானந்தோறுமதலியமீதிறகொண்டாடிசசமுத்திரத் ...தமாடி அந்தத் நாள் மவுனபலிதூவிப் பிறபூசையுமாற்றித் தூக்கியவி ...டக கொடியை யிறக்கினர் மற்றொருகாலத்தில் தெப்பவிழா கொண்டாடி ...ர் இத்திருவிழாக்காலங்களில் பிரமாவானவர் அனேகமானபூதானம், சுவா ...தானம், அன்னதானமுதலிய செய்து சுவாமியின் சந்நிதானத்தில் வணங ...கிநின்றான் மருந்தீசன் வெளிவந்து, பிரமனே! நீ நடத்திய திருவிழாவைக ...கண்டு மகிழ்ந்தோம் என்னவரம் வேண்டுமென்ன, சுவாமி! இனி இத்தலத் திருவிழாசெய்பவரும், செய்விப்பவரும், தரிசித்தவரும், இயன்றமட்டும் ...விசெய்தவரும், வேண்டியபணியியற்றினவரும், சகல செல்வங்களுடன் ...ந்து பின்னர் முத்தியடைதல்வேண்டுமென்றனன் அங்ஙனமே யாகுக ...னக்கூறி மறைந்தனன் பின்னர் பிரமன் சத்தியலோகஞ்சென்று வாழ் ...ந்தனன் மற்றொருகாலத்தில் இந்திரன் விஷ்ணுமுதலியவர்களும் திருவிழாச் செய்து மகிழ்ந்தனர்.

பிரமன்திருவிழாச்செய்படல முற்றிற்று.

வேதம்பூசைபுரிபடலம்.

சோமுகனென்னு மசுரன் தவமியற்றிப் பலவரங்களை யேற்று எட்டுத் ...திக்குகளையும் வென்று தன்னை யெதிர்ப்பவரொருவருமின்றி விண்ணுலகிற் சென்று தேவர்களை யெல்லாம் வாட்டிச் சத்தியலோகம் புகுந்து புயங்க

னைத் தட்டித்திசை முகனமவுனமுற்றிருக்க அவ்விடத்திருந்த வேதங்களை யெல்லாம் வாரிக்கொண்டுவந்து சமுத்திரத்திலே சேற்றிற் புதைத்துத்தான கடலிலொளித்துக்கொண்டனன். மறையவன் வருத்தமுற்று விஷ்ணு வினிடத்தில் கூறவும் அவன் மிகுகோபம் வாய்ந்து, பெரியதோர் மீனுருவமெடுத்து கடலிற் பாய்ந்து தேடிச் சோமுகனைக்கண்டு அவனைக் கொன்று வேதங்களைப் பிரமனிடத்தில் கொடுத்துவிட்டனன் மீனுருவம் பெற்ற நாரணன் இத்தகைய அரியகாரியஞ் செய்தார் என்னைக் காட்டிலு வேறொருவருண்டோ வென்று கருவங்கொள்ளத் தான்கொண்டமீனுருவ நீங்காது வெறிகொண்டு சமுத்திரத்தைக் கலக்கி உபத்திரவஞ்செய்யப், பிரமன் முதலியோர் கயிலையையடைந்து முறையிட, கண்ணுதற்கடவுள் கிருபைகூர்ந்து தனது சமீபத்திருந்த சாத்தனுரை யழைத்து நீபோய விஷ்ணுவாகிய மீனின்செருக்கை மாற்றி வருவாயென்றேவலுஞ் சாத்தனும் போய்க்கடலிற்புகுந்து அம்மீனின் கண்களைப்பிடுங்கி மமதையைக்கெடுத்து வந்து சிவபெருமான் திருவடியில் கண்களை வைத்து வணங்கினன் முதல்வன குஞ்சிரிப்புட னெழுந்தருளி யிருந்தனன் விஷ்ணு தனது மயக்கமொழிந்தவுடன் தனது மீனுருவத்தை மாற்றச் சமுத்திரவழியே சென்று திருக்கோணமாமலையை யடைந்து பூசித்துத் தனது பழைய வுருவத்தினை யேற்று வைகுண்டஞ்சென்றனன்

வேதங்கள் பிரமாவை நோக்கி ஐய! நாங்கள் அசுரன் கரத்திற்பட்டதனுலுண்டாகிய பாவத்தைப் போக்கடிக்கத் தவமியற்றவேண்டு மொருதலத்தினைத்தெரிவிக்கவேண்டுமென்றன நான்முகன் வேதங்களே! உமமிடத்திலெழுதப்பட்டுள்ள உயர்ந்த தலத்தினை மறந்தீரோ வென்ன, ஆம், ஆம், ஞாபகத்திற்குவந்தது அந்தத்தலத்திறுக்குப்போய வருவோமென்றுவிடைபெற்று மனிதவுருவம் வாய்ந்து தென்தேயநாடித் திருவான்மியூருக்குச் சமீபிக்கையில் அரிய சோலை முதலிய சூழ்ந்த இடத்தைக்கண்டு அங்கேயேயிருந்து தவமுஞற்றி அங்குச் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து, திருவான்மியூருக்குச் சென்று தினமுந் தரிசித்துவருகையில் ஒருநாள் சங்கரன் பிரத்தியட்சமாகி உங்களுக்கென்ன வேண்டுமென்ன, பெருமானே! அசுரனுல் எங்கட்குவந்த பாவம் போகவேண்டும இத்திருவான்மியூர் எல்லையினில் நாங்கள் தவமியற்றிய இடத்திற்கு * வேதசிரேணி யென்றும் இத்தலத்திற்கு வேதபுரியென்றும் வழங்க வேண்டுமென்றன அங்ஙனமே யாகுகவெனக் கூறிக்கரந்தனன்.

வேதம் பூசைபுரிபடல முற்றிற்று

---

* இக்காலத்தில் இவ்வூர் வேளச்சேரி என்று வழங்குகிறது.

காமதேனுவருள்பெறு படலம்.

வசிட்டமுனிவர் ஒருகாலத்தில் இந்திரனிடத்திற்குப் போய் தேவேந்திரனே! காசித்தலத் தெழுந்தருளியிருக்கும் விசுவநாதனை ஒருமண்டலமபிடேகித்துப் பூசை செய்ய வெண்ணங்கொண்டேன் நின்னிடத்துள்ள காமதேனுவை யென்பாலனுப்புவையேல், தினம் வேண்டிய பால் பெறுவேனென்றுகூறி அதற்கியைவுப் பசுவோடும் வாரணாசியடைந்து நாடோறுஞ்சதாசிவத்திற்குப்பாலபிடேகஞ்செய்துவந்தனர். ஓர்நாள் அப்பசு காசியைவிட்டுகானகங்களில் மேய்ந்துகொண்டே கயிலைச்சாரலடைந்து ஓர் சோலையினழகினைக்கண்டு ஓர்நாளமுற்று மவ்விடமே யிருந்து மற்றைநாள் காசிவந்து சேர்ந்தது. வசிஷ்டர்கண்டு கோபித்துக் காட்டுப்பசுவாகப் போகக்கடவதென்று சபித்தனர். காமதேனு சாபமேற்றுத் தெற்கு நோக்கி வந்துகொண்டிருக்கையில் திருவான்மியூரெல்லைக்குள் வரலும் தனக்கு நல்லறிவு பிறந்து ஓ! ஓ! ஏதோவதிசய மிவ்விடத்துள்ளதென்று எண்ணி அங்குமிங்குநோக்க ஒரு புற்றுக்குள் சிவலிங்கப்பெருமா னிருக்கக் கண்டு வியப்புற்றுத் தன் மடியினின்றும் பாலைப் பெருமான் றிருமுடியிற் சொரிந்து தினமுமெல்லையுள் வாழ்ந்து வந்தது.

இங்ஙன நிகழுகையில் அடுத்த * சைதையென்னு மூராயாண்டு வரும் வருகிய சத்யூவென்னு மரசன் தனது ஊரிலுள்ள பயிர்களைக் காட்டுமிருகங்கள் அழித்து வருதலைக் கேள்வியுற்று வேடருடன் சென்று வனத்திலுள்ள மிருகங்களை யெல்லாங் கொன்று திரும்புகையில், சிங்கமொன்றினைக்கண்டு துரத்திக்கொண்டேகையில் அது வான்மியூ ரெல்லைக்குட் சென்றது. அங்கு மேய்ந்துகொண்டிருந்த காமதேனு அந்தச் சிங்கத்தினைக்கண்டு தாவித்தன் கொம்புகளாற் குத்திக் கொன்றுவிட்டுப் புற்றுக்குள்நுழைந்து கொண்டது, அரசன்பார்த்து ஆச்சரியமுற்று என்னே! என்னே! சிங்கத்தினைப்பசுவென்றகதையை யான் கேட்டதில்லை, இதனுண்மை யறிவேனென்று புற்றுக்குச் சமீபித்துப் பசுவைப் பிடிக்க வெண்ணிப்புற்றைச்சுற்றிலுஞ்சேனையைச் சூழச்செய்து ஒரு சிறு அம்பைப் புற்றுள் பிரயோகித்தனன். காமதேனு திடுமென வெழும்பித் தன்குளம்பை லிங்கத்தின் மேல் வைத்துத் தாண்டி வெளிவந்து யாவரையும் கொன்றுவிட்டுப் பழையபடி யுட்புகுந்து, சுவாமியின் மேனியில் குளம்பு பதிந்திருத்தலைக் கண்டு பயந்து அனேகமான தோத்திரங்களைப் புரிந்து நிற்கச் சுவாமி வெளிவந்து தேனுவே! பயப்படற்க நின்னது அடியை நமது கந்தன் பாதமெனக்கொண்டோம். நமது

---

* இந்நகரிப்போது சைதாப்பேட்டை யென்று வழங்குகிறது.

மேனியில் வாய்ந்த சுவட்டினைக் காஞ்சியில் காமாட்சிதந்தவளைத் தழுவி முலைத் தழும்பினைப்போற் பெற்றேம் நினது பாலால் நம்மைத் திருமு அபிடேகித்தனையாகலின் நாம் வெண்மேனி பெற்றுப் பாலவண்ணனென்னும் பெயரைப்பூண்டனம். நீ சுகமாயப் பழைய வடிவத்தை வாய்ந்து விண்ணுலகஞ் சார்ந்து வாழுதி என்று கட்டளையிட்டபின் இறந்த அரசர் முதலியோரையுமெழுப்பித் தாமறைந்தனன்.

சத்தியூவரசனெழுந்து விம்மிதமடைந்து, தன் மந்திரிமுதலியோரை யழைத்து அமைச்சர்களே! நானினி இத்திருவான்மியூரினை விட்டுவருவதானில்லை எனது புத்திரனுக்குப் பட்டங்கட்டி நீவிரெல்லாமவனுடனிருந்து, சைந்யத்தையாளக்கடவீரென்றனுப்பியபின் தான் நீராடிப் பூதிபூசி உருத்திராக்கமணிவடந்தாங்கிப் பாலவண்ண நாதனைப்பணிந்தேத்திப் பலரை யழைத்துப் பொருளீந்து மண்டபங் கோபுரங் கோயில் முதலியகட்டி, வீதி வகுத்துச் சைவர்களைக் குடியேற்றி நகரமுண்டாக்கித் திருவிழா நடத்தித் தரிசித்து வாழ்ந்து ஒருநாள் மோட்சதாயனி எனனுந் தீர்த்தத்து முழுகிக் கயிலையை யடைந்து சிவகணத்துள் வாழ்ந்தனன்.

காமதேனுவருள்பெறுபடலம் முற்றிற்று.

இயமன்பழிதீர்படலம்.

வேதாகமங்களை யெல்லா நன்குபடித்துத் தேர்ந்த மிருகண்டுமுனிவர் மருத்துவதி யென்னு மனைவியோடு வாழ்ந்துவருகையில், புத்திரனில்லாக் குறைவால் காசிப்பதியினையடைந்து தவமியற்றி ஒரு புத்திரனைப்பெற்றனர். அப்புத்திரனுக்கு வயது பதினாறு என்று விசுவேசனருளியும், கவனியாது புத்திரபாக்கியமடைந்த வொன்றே சிலாக்கியமெனா வெண்ணி நாளொரு மேனியாக அப்பாலனை வளர்த்து வருகையில், பதினாறுமாண்டு நெருங்கவுந் தாய் தந்தையர் கவலையின் மூழ்கித் துன்பப்படுகையில் பாலன் மார்க்கண்டன் தாய் தந்தையர்களைப் பணிந்து கூறுவானாயினன்: நீவிர் துக்கப்படுவதினா லென்னபயன் அந்த வெம்பயமொழிப்பதற்கு முன்னமே யறிந்துள்ளன யாவுஞ் சிவாஞ்ஞையின்படியே நடக்கும் எமனுனை யொன்று மென்னைச் செய்யாது விடைகொடுப்பீராக வென உத்தரம் பெற்றுத் தென்றிசை நோக்கி நடந்து திருக்கடையூ ரடைந்து பற்பல விதமான அரியபுட்பங்களை யெல்லாங் கொய்து அமுதகண்டீசனை யருச்சனைசெய்து

ரண்டிருக்கையில் எமன் அவ்விடஞ் சமீபித்து அழைக்கவும், மார்க்கண் இலட்சியஞ் செய்யாது பூசைசெய்துகொண்டிருந்தனன். நமன் கோபி பலவிதமாகப் பயங்காட்டியும் பயப்படாமையால் உடனே பாசக்கயிற் வீசிப்பிடித்தனன். மார்க்கண்டேயன் சம்போ சங்கரா மகதேவா இரட்சி இரட்சியுமென்றலற அக்கணஞ் சிவபெருமான் வெளிவந்தருளி எமனை டியுதைத்து மார்க்கண்டேயன் பயமொழித்துக் கருணைகூர்ந்து மறு டியு மெமனை யெழுப்பி மறைந்தனரே.

காலனெழுந்து பலதரம் பணிந்து முனிவனை வாழ்த்தி விடைபெற்று டக்குத்திசையை நோக்கிச்செல்ல, வழியிற் கண்ணுற்ற நாரதரிடத்து ந்த யாவற்றினையுமுரைக்க அவர் மறலியே அஞ்சிக்கிறாய் சென்று இதோ மீபத்துற்ற திருவான்மியூரடைந்து பூசிப்பையேல் உன்பாவமொழியு மனக்கூற, அங்ஙனமே அவரும் எல்லைக்குச்சமீபத்திற்சென்று வேதசி ரேணி என்னுமிடத்திலடைந்து அவ்விடத்தே தனது காத்துத்தண்டத்தை நிறுத்தி அதனையே சிவலிங்கமாகப் பாவித்துப் பூசித்துத் தடமொன்றுண் டாக்கி இரவுதோறுஞ் சென்று மருந்தீசனை வணங்கிவருவன் ஒருநாள் பால்வண்ணநாதன் வெளிவந்து காட்சிகொடுத்து என்ன வேண்டுமென, சுவாமீ! உன்னடியை வணங்குவோர்க்கு எமபயமில்லையென்பதை யறிந் தேன் மார்க்கண்டேயனால் பட்டபாடு சென்மந்தோறுமறவேன். வேத சிரேணியினில் நான் தாபித்த இலிங்கத்திற்குத் தண்டபாணியென் வென பெயர் வழங்கவேண்டும் அச்சிவலிங்கப்பெருமானை வணங்குவார்க்கு மந்த காசம் வயிற்றுளைவு, மேகம், குட்டம், வாதம், காமாலை முதலிய எல்லா ரகளும் ஒழிதல் வேண்டும் என்றனன் உன் விருப்பத்தின்படியாகுக என்று கூறி மருந்தீசன் ஆலயத்துட் சென்றனன்

பின்னர் காலன் வேதசிரேணியினிற் றண்டபாணிக்கடவுளுக்குப் பிர மோற்சவமுதலிய பலதிருவிழா நடத்திப் பலவரங்களை யேற்றுத் தன்னுல கஞ் சென்றனன்.

இயமன்பழிதீர்படலமுற்றிற்று.

இராமன்வரம்பெற்றபடலம்.

அயோத்திமாநகரிலே அரசாட்சி செய்த தசரதசக்கரவர்த்தி தனக்குப் புத்திரனில்லாது வருந்துகையில் தனது குருமுனிவர் கட்டளைப்படி யொரு யாகம் வளர்த்தனன். அவ்வியாகத்தினின்றும் ஒரு பூதமுதித்துக்கொடுத்த ஒதனத்தைத் தனது மனைவிமார்கள் மூவருக்கும் ஈந்தனன் அம்மூவருக்கு நான்குபுத்திரர்கள் பிறந்தனர் அவருள் மூத்தவன் நாராயணமூர்த்தியின் வ தாரமாகப் பிறந்தமையால் அவரருமையையெண்ணி இராமனென்று பெய ரிட்டனர். இவ்விராமன் றனது தம்பியருடன் வளர்ந்து சகலகலை

